| | | | |
|---|---|---|---|
| Headline | Ongkili assures no blackouts during GE14 electoral process | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 09 May 2018 | Language | Tamil |
| Circulation | 35,000 | Readership | 125,000 |
| Section | News | Page No | 1,14 |
| ArticleSize | 136 cm² | Journalist | NULL |
| PR Value | RM 2,077 | | |
| | | | |




# சீரான மின் விநியோகம்



**கோலாலம்பூர், மே 9-**

நாட்டின் 14ஆவது பொதுத்தேர்தல் சீராக நடைபெறும் பொருட்டு வாக்களிப்பு மையங்கள் முழுவதும் மின்சாரக் கையிருப்பு சீராக இருக்கும் என்று எரிசக்தி பசுமைத் தொழில்நுட்பம் நீர்வளத் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் மெக்சிமஸ் ஓங்கிலி தெரிவித்தார். இந்த நிலையை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட வேட்பாளர் நியமன மையங்கள், வாக்களிப்பு மற்றும் வாக்குகளை எண்ணும் மையங்களில் 189 மொபைல் ஜெனரேட்டர்களை டிஎன்பி வைத்துள்ளது.


பக்கம் 14


## சீரான மின்...

கடந்த மாதம் 28ஆம் தேதி தொடங்கி தேர்தல் முறைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எந்த மின் தடையும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய உரிய நடவடிக்கையை டிஎன்பி மேற்கொண்டுள்ளது.

இதில் மின்சாரக் கையிருப்பு தொடர்ச்சியாக இருப்பதை உறுதி செய்ய ஒவ்வொரு மாநிலத்தின் நடவடிக்கை அறைகளும் செயல்படத் தொடங்கி விட்டதோடு டிஎன்பியின் தொழில்நுட்பாளர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அப்படி ஏதேனும் புகார்கள் அல்லது கருத்துகள் வழங்க விரும்பினால் முகநூல் வாயிலாக டிஎன்பியின் ஒரே நிறுத்த மையத்தை முகநூல் அல்லது ‘careline’ வாயிலாகத் தொடர்பு கொள்ளலாம் அல்லது 15454 வாயிலாகவும் தொடர்பு கொள்ளலாம் என்று ஓர் அறிக்கையில் மெக்சிமஸ் குறிப்பிட்டார்.


Powered by: iSENTIA